செ.வெ.எண்:815 29.9.08

<u>பத்திரிக்கைச் செய்தி</u>

நரிக்குறவர்களை நல்ல நெறிக்குறவர்கள் என்று அழைத்து அவர்கள் பல்வேறு இடங்களுக்கும் அலைந்து திரியாமல், ஓரிடத்தில் இருந்து வாழவேண்டுமென்பதற்காக, திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் ஒன்றியம், தேவராயநேரியில் 140 குடியிருப்புகளை 13.3.1975 அன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இருப்பினும், நரிக்குறவர்கள் இன்றும் நாடோடிகளாகவே வாழ்ந்து வருகின்றனர். நரிக்குறவர் சமுதாயத்தைச் சார்ந்த மக்கள் கல்வி, சமூகம் மற்றும் பொருளாதார நிலைகளில் உயர்வடைய பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்குவதற்கென 2008–09ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு "தமிழ்நாடு நரிக்குறவர் நலவாரியம்" மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி அமைக்கப்பட்டு அதன் முதல் கூட்டம் இன்று மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அரசு முதன்மைச்செயலர்கள், நிதித்துறை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, சமூகநலத்துறை, வருவாய்த்துறை, செயலர், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை ஆகியோர்களும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆணையர்களும் மற்றும் பள்ளிக்கல்வித்துறை இயக்குநரும் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில், நரிக்குறவர் நல வாரியத்தின் அலுவல் சாரா உறுப்பினர்கள் திருவாளர்கள் மா.சங்கர், ஏ.கே.பாபு, பி.எம்.ஜே.ராஜ்குமார், ஆர்.சிவக்குமார்,

எஸ்.ராஜேந்திரன், எஸ்.ஜீவா, எம்.பாண்டியன், டி.சேகர், எஸ்.ரவிச்சந்திரன், ஆர்.சுப்ரமணியன், பி.கஜேந்திரன், திருமதி என்.காசியம்மாள் மற்றும் திருமதி எம்.சீதா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் குடியிருக்கும் நரிக்குறவர் இனத்தைச் சார்ந்தவர்களைக் கண்டறிந்து அவர்களை வாரியத்தில் உறுப்பினர்களாகப் பதிவு செய்தல், வாரிய உறுப்பினர்களுக்கு அரசு வழங்கும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் குறித்து அம்மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல், பல்வேறு நலத்திட்ட உதவிகள் பெறுவதற்கான விண்ணப்பங்களை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலருக்கு அனுப்பி வைக்க உதவி புரிதல் மற்றும் நலத்திட்ட உதவிகளைத் துரிதமாகக் கிடைப்பதற்கான நடவடிக்கை எடுத்தல் போன்ற செயல்பாடுகளை இவ்வாரியம் மேற்கொள்ளும்.

இதுதவிர, நரிக்குறவர்கள் சிறுதொழில் நடத்த தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம் மூலம் 50% மானியத்துடன் கூடிய கடன் வழங்குதல், மாநில மற்றும் தேசிய அளவில் நடத்தப்படும் பொருட்காட்சிகளில் நரிக்குறவர் வாரியத்தின் சார்பில் அரங்குகள் அமைக்க அரங்கு வாடகை அளித்தல் மற்றும் நரிக்குறவர் இனமக்கள் மேம்பாடு அடைய உறுப்பினர்களால் வழங்கப்படும் ஆலோசனையின்பேரில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது. இவ்வாரியத்தில் பதிவுபெற்றுள்ள உறுப்பினர்களுக்கு பல்வேறு நலத்திட்டஉதவிகளை வழங்குவதற்காக முதற்கட்டமாக ரூபாய் ஒரு கோடி நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வாரியத்தில் பதிவு செய்யப்பெறும் உறுப்பினர்களுக்கும் அவர்களது குடும்பத்தாருக்கும் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளாவன:-

| | | |
|---|---|---|
| **1. விபத்து ஈட்டுறுதி திட்டத்தின் கீழ்:** | | |
| | அ) விபத்தினால் மரணம் ஏற்பட்டால் உதவித் தொகை | ரூ.1,00,000/- |
| | ஆ)விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப | ரூ.10,000/- முதல் ரூ.1,00,000/-வரை |
| 2. | இயற்கை மரணத்திற்கான உதவித் தொகை | ரூ. 15,000/- |
| 3. | ஈமச்சடங்கு செலவிற்கான உதவித் தொகை | ரூ.2,000/- |
| **4. கல்வி உதவித் தொகை** | | |
| | அ) 10-ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | ரூ.1000/- |
| | ஆ)10-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | ரூ.1000/- |
| | இ) 11–ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | ரூ.1000/- |
| | ஈ) 12–ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | ரூ.1500/- |
| | உ) 12–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவருக்கு | ரூ.1500/- |
| | ஊ) முறையான பட்டப்படிப்புக்கு<br>மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்டப்படிப்புக்கு | ரூ.1500/-<br>ரூ.1750/- |
| | எ) முறையான பட்ட மேற்படிப்புக்கு<br>மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்புக்கு | ரூ.2000/-<br>ரூ.3000/- |
| | ஏ) தொழிற்கல்வி பட்டப் படிப்புக்கு<br>மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்டப்படிப்புக்கு | ரூ.2000/-<br>ரூ.4000/- |
| | ஐ) தொழிற்கல்வி பட்ட மேற்படிப்புக்கு<br>மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு | ரூ.4000/-<br>ரூ.6000/- |
| | ஒ) ஐ.டி.ஐ அல்லது தொழிற்பயிற்சி படிப்புக்கு<br>மாணவர் இல்ல வசதியுடன் ஐ.டி.ஐ அல்லது பல்தொழில் பயிற்சி படிப்புக்கு | ரூ.1000/-<br>ரூ.1200/- |

| | | |
|---|---|---|
| 5. | திருமண உதவித் தொகை | ரூ.2000/- |
| 6. | மகப்பேறு உதவித் தொகை | |
| | அ) மகப்பேறு: மாதம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் | ரூ.6000/- |
| | ஆ) கருச்சிதைவு/ கருக்கலைப்பு | ரூ.3000/- |
| 7. | மூக்குக் கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் | ரூ.500/- வரை |
| 8. | முதியோர் ஓய்வூதியம் மாதந்தோறும் | ரூ.400/- |

ந. வாசுதேவன்
அரசு செயலாளர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9